கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்
Coventry Tamil Welfare Association

http:// HYPERLINK http://www.tamils.org.uk
www.tamils.org.uk
Email: coventrytamils2002@gmail.com

தலைவர்:- உயர்திரு க.அரியரத்தினம். 07823535094

புரட்டாதி மாத இதழ்
NEWS BULLETIN
SEPTEMBER 2020
ஆக்கம்:- ஸ்ரீ.பகீரதன்

நாள்	நிகழ்வு
12/09/2020 முதல்	அன்புள்ள பெற்றோர், மாணவர்களுக்கு வணக்கம். சென்ற தவணை Whatsup /Skype இணையத்தளத் தமிழ் வகுப்பில் கலந்துகொண்ட மாணவர்கள், மற்றும் தவிர்க்கமுடியாத காரணங்களால் கலந்து கொள்ளமுடியாதவர்களது வேண்டுகோளுக்கு அமைய, புதிய தவணைக்கான தமிழ்ப்பாட வகுப்புகள் Zoom செயலி மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. President Kennedy பாடசாலை வாடகைக்குக் கிடைத்ததும், அங்கு கலைப்பாடங்களுடன் வகுப்புகள் தொடரும். கடந்தகால பெறுபேறுகளை மதிப்பீடு செய்து பல மாணவர்கள் வகுப்பேற்றப்பட்டுள்ளனர். புதிய வகுப்புக்கான விண்ணப்பப் படிவங்கள், தமிழ்ப் புத்தகங்கள் தேவையானோர் தலைமை ஆசிரியையுடன், அல்லது திருமதி பொன்மணியுடன் தொடர்பு கொள்ளலாம். உங்கள் ஒவ்வொருவருக்கும், Zoom இணையத்தள அடையாள தொடர்பு விபரம் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படும். சென்ற தவணை தமிழ் வகுப்புகள் இலவசமாக இடம்பெற்றன. இந்தத் தவணை, ஆசிரிய வேதனத்துக்காக ஒரு தவணைக்கு £25 அல்லது ஒரு வருடத்திற்கு (மூன்று தவணைகள்) £70 அறவிடப்படுகிறது. நன்றி. கொவன்றி தமிழ் மொழிக் கலைக் கழகம், கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்.

பேச்சுப்போட்டி

தமிழ் ஆர்வலர் குழு வழங்கும் தேசிய அளவிலான தமிழ்ப் பாடசாலைகளுக்கிடையிலான பேச்சு போட்டி.

பேச்சுப்போட்டியின் விபரங்கள்

இந்தப் போட்டிகள் ZOOM செயலி வழியாக நடைபெறும். மண்டல வாரியான ஆரம்ப கட்டப் போட்டிகள் பதிவு செய்யப்பட்டாலும், எதுவும் எந்தவொரு சமூக வலைத் தளங்களிலும் பகிரப்படமாட்டாது.

ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் சம மதிப்பெண்கள் பெறும்பட்சத்தில், பதிவு செய்யப்பட்டதை மீண்டும் ஆய்வு செய்து தேர்வு செய்ய ஏதுவாக மட்டுமே இந்த ஆரம்ப கட்டப் போட்டிகள் பதிவு செய்யப்படுகின்றன.

பெற்றோர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகத்தினர் சம்மதிக்கும் பட்சத்தில் இறுதிப்போட்டி சமூக வலைத்தளங்களில் நேரலையாக ஒளிபரப்புச் செய்யப்படும்.

மண்டல வாரியான போட்டிகள் அனைத்திற்கும் ஐந்து நடுநிலையான நடுவர்கள் இறுதிப் போட்டியாளர்களைத் தேர்ந்தெடுப்பர்.

நடுவர்களுக்குப் போட்டி நாளன்றுதான் போட்டியாளர்கள் மற்றும் பாடசாலைகளின் விபரங்கள் வழங்கப்படும்.

நடுவர்கள் ஒவ்வொரு போட்டியாளர்களினதும் பேச்சுத்திறனுக்கு, உச்சரிப்பு (Articulation), விளக்கம் (Presentation), இடைநிறுத்தம் (Pause and Command), சைகைகள் (Body Language) ஆகியவற்றினடிப்படையில் மதிப்பெண்களை வழங்குவர்.


போட்டியாளர்கள் முடிந்தவரை பார்த்துப் படிப்பதைத் தவிர்த்தல் நல்லது தேவைப்பட்டால், சில குறிப்புகளை அவ்வப்போது பார்த்துக்கொள்ளலாம். பெற்றோர்களும் தேவைப்படும்போது குறிப்புகளை நினைவூட்டலாம்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

பங்குபெறும் அனைத்துப் பிள்ளைகளுக்கும் இறுதிப் போட்டி முடிந்தவுடன் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பெற்றோர்களும், பாடசாலை ஆசிரியர்களும் பங்குபெறும் பிள்ளைகள் குறித்த மேலதிக தகவல்கள் எதுவும் பகிர விரும்பினால், போட்டிகள் தொடங்க முன்னர் பகிர்ந்து கொள்ள வேண்டுகின்றோம்.






தாய்த்தமிழ் உறவே

கருவறையில் உயிர்காத்தாயே
தமிழ் உயிர்எழுத்து கற்றுத்தாயே
மெய்யுள் உயிர் சுமந்தாயே
உயிர்மெய் தோற்றுவித்தாயே
அம்மா என்னும் மூன்றெழுத்தே
அவனி எங்கும் ஒலிக்கிறதே
தேன் மதுரத் தமிழோசையை
பரவும் வகை செய்வோமே
Zoom இயங்கலையில் இனிய தமிழ்
இல்லமெல்லாம் தாய்த்தமிழ்
தமிழர் இதயங்கள் மகிழ்கிறதே
தமிழ் பயில்வோம் வாருங்களே
யாம் பெற்ற இன்பம்
பெறுக இவ்வையகம்

நன்றி


திருநின் வசந்தகுமார்
1A



கொரோனா நினைவுபடுத்திய தமிழர் பண்பாட்டு பழக்கவழக்கம்

தமிழர்களுடைய பண்பாடுகளில் ஒன்று கைகூப்பி வணங்குதல். இந்தப் பண்பாடு தான் உலக மக்களுக்கும் பழக்கமாக மாறியது. தற்பொழுது நிலவி வரும் கொரோனா என்னும் கொடிய நோயினால் வேளையை இறைவனுக்கு கூட கைகுலுக்கி வணக்கம் செலுத்தும் முறையை கடைப்பிடித்து வருகிறார்கள். இது மகிழ்ச்சியாக நன்றிவிலுத்தும் பழக்கம் நம் தமிழர்களிடையே இருந்து வந்திருக்கிறது. இன்னைக்கு உலக நாடுகள் அனைத்திலும் நல்ல பதவிகளில் சேவையாற்றி சிலைகளாக உள்ளவர்களுக்கும் நன்றி செலுத்தும் விதமாக ஒவ்வொருவருடைய வீட்டு வாசலிற்கு முன்னால் நின்று கை தட்டி நன்றிக் கடனைச் செலுத்தினார்கள். இதற்கோ "சக்கம் சக்கம் தருக" என்பதற்கிணங்க வீட்டிற்கு வெளியே வேறு வீடு திருடும் போதுதான் கால், முகம் கழுகி சுத்தமாக உள்ளே வரவேண்டும் என்பது தமிழருடைய பழக்கமாக இருந்துள்ளது. கொரோனா நோய் வந்ததினால் இப்பழக்கம் எல்லோராலும் கடைப்பிடிக்கப்படுகிறது. சித்தர்கள் தங்களுடைய தவ யோகமினால் எந்த மூலிகை எதற்கு பயன்படுத்த வேண்டும் என்று அன்றே ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்துள்ளார்கள். அந்த ஓலையில் மருத்துவ குணங்கள் பார்த்தியும் குறிப்பிட்டிருந்தார்கள். இன்று மேற்கத்தேய மருத்துவமுறைகளை நடைபிடித்து வாழ்ந்தாலும் கொரோனா என்ற கொடிய நோயிலிருந்து எம்மை பாதுகாக்க திரும் வேல்வியாள மருகினின் பாவனை அதிகரித்துள்ளது. எனவே நோய்க் தொழலைத் தவிர்ப்பதற்காக உலகமே தமிழரின் பாரம்பரியத்தை பின்பற்றுவதை நினைத்து பெருமிதம் கொள்வோம். தமிழர் என்று சொல்லுவதை தமிழரின் பாரம்பரியத்தை வேணிப் பாதுகாப்போம்.

ஆண்டு 7 மாணவி,
கனகா சர்வானந்தகுமார்.





தமிழ் பள்ளிக்கு வாழ்த்துரை

செல்லும் பாதை புரியவில்லை சேரும் இடமும் தெரியவில்லை.
நிலம் விட்டு புலம் வந்து தொலைந்த எம் பாரம்பரியம்.
அழிந்து கொல்லும் அடையாளத்தை கொன்ற மொழி வளர்த்து-வாழ
எந்த வழி என்று போகும் வழி தெரியாமல்.
சேரும் இடமும் புரியாமல் தள்ளாடி தொடர்ந்து நிற்கையிலே-அந்த
புண்ணியவான் கருணைகனில் வளம் கொண்டு புகழ் பூத்த.
கொவன்றி நகர் தனிலே வந்துதித்தாய்!! அதிலொளியே!
எண்ணிக்கையில் சேர்ந்த மானவரை ஒன்று சேர்த்து
அடுதல் எடுத்து ஆதியடையாளத்தை அநவணைத்து
தாய் மொழி தமிழ் மொழி வணங்கி மொழியோடு பண்பாடும்
இரு விழி எனக் காத்து வழி ஒன்றே நம் வழி- தமிழ்
மொழி புகட்டி அதனோடு கலையும் பண்பும் கனிவுடன் பகருங்கும்.
ஆசான்கள் அறிவுரை கேட்டு
சிலை தனில் எடுத்தாய்
சிந்தை தனில் நிலை பெற
வைத்த தமிழ்ப் பள்ளியே!
நன்றென சம்மனம் போற்ற தலம் பெற்று விளங்கும்
மதியதையளித்து மங்காப் பொங்கு புகழ் பெற்று-நீ வாழ
உன் ஓராயிரங்கள் உனக் கெனக் கொண்டு.
நாம் நோற்ற மலர்ந்த மலரோடு பவனி உருகின்றோம் - உன்
வளர்ச்சியில் எங்களோடு நீயும் சேர்ந்து மகிழ்வுற வாழ்த்துகிறோம்-நீ
வாழிய வாழிய வளமுடனே!

ஆண்டு 7 மாணவி,
சாருண்யா நேமிநாதன்

Support
Coventry Tamil Welfare Association
When you shop at smile.amazon.co.uk, Amazon Donates
Visit smile.amazon.co.uk
smile.amazon.co.uk





OFAAL எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சைகள்

OFAAL எழுத்துப் பரீட்சை, மற்றும் செய்முறைப் பரீட்சைகளை இணையவழி மூலம் நடத்துவது தொடர்பாக பெற்றோரின் விருப்பங்களை அறிவதற்காக, நடைபெற்று வருகின்ற கருத்துக் கணிப்பில், 80%ற்கும் அதிகமானோர் விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில், இணையவழி மூலமே நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தக் கருத்துக் கணிப்பில் 30/09/2020 மாலை 7 மணிவரை உங்கள் விருப்பங்களைத் தெரிவிக்க முடியுமென்பதால், தயவுசெய்து பின்வரும் இணைப்பினூடாகச் சென்று உங்கள் https://www.surveymonkey.co.uk/r/8DDD22H விருப்பங்களைப் பதிவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அந்தவகையில் எழுத்துப் பரீட்சை **31/10/2020 சனிக்கிழமை** நடைபெறும்.

கீழ்வரும் திகதிகளில், ஒவ்வொரு வகுப்பினருக்கும், எல்லா பாடங்களுக்குமான செய்முறைப் பரீட்சைகளும் நடைபெறும்.

Grade 1, Grade 2
10/10/2020 சனிக்கிழமை
11/10/2020 ஞாயிற்றுக்கிழமை

Grade 3, Grade 4
17/10/2020 சனிக்கிழமை
18/10/2020 ஞாயிற்றுக்கிழமை

Grade 5, Grade 6
24/10/2020 சனிக்கிழமை
25/10/2020 ஞாயிற்றுக்கிழமை

Grade 7, Grade 8
07/11/2020 சனிக்கிழமை
08/11/2020 ஞாயிற்றுக்கிழமை
14/11/2020 சனிக்கிழமை
15/11/2020 ஞாயிற்றுக்கிழமை

மேலதிக விபரங்களுக்குக் கீழ்வரும் இணைப்பை அழுத்தவும்.
https://www.surveymonkey.co.uk/r/VWWLY8

இசையின் நாயகனுக்கு - எம் இதய அஞ்சலிகள்!



தன் தேன்மதுரக் குரலால்
தமிழர் இதயங்களை மட்டுமல்ல
தரணியிலுள்ள எல்லா உயிர்களையும்
தம் வசப்படுத்திய பாடும் நிலா
ஒளியிழந்து போனதுவே!
இசை உலகம் இருண்டு கிடக்கிறதே!

எத்தனையோ இரவுகள் - எம்
இதயங்களைத் தாலாட்டித்
தூங்க வைத்த அந்த இதயம்
அசைவின்றிக் கிடக்கிறதே!
சுர வரிசைகளை மீட்டும்
நரம்பு அறுந்து போனதுவே!

உங்கள் தேகம் மறைந்தாலும்
இசையாய் எம்மோடு என்றும்
இணைந்திருப்பீர்கள்!

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கத்தின்
ஆரம்பம் முதல் அன்போடு
நட்புக்கரம் நீட்டி
ஆதரவு தந்தீர்கள்!
அந்த அன்புக்கும் நட்புக்கும்
தலைவணங்கி - உங்கள்
ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கொவன்றி தமிழர் நலன்புரிச் சங்கம்